DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : MC 14/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிர் மனுதாரர் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பவானி |
| Father / Husband Name | சேகர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17.06.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** நான் என் கணவருடன் சுமார் 10 மாதம் சேர்ந்து வாழ்ந்தேன். நான் 10 மாதம் சந்தோஷமாக இல்லர வாழ்க்கையை வாழ்ந்தேன் என்றால் எங்களுக்கு குழந்தை பிறந்திருக்கும் என்றாலும், நான் 10 மாதம் அவருடன் நல்ல முறையில் வாழவில்லை என்றால் சரியல்ல. என் மாமனார் மற்றும் மாமியார் 2025 ம் ஆண்டு இறந்துபோன சங்கதி தெரியுமா என்றால் அப்போது தெரியாது, அவர்கள் எங்களுக்கு தெரியபடுத்தவில்லை. எனக்கு 3 வீடு உள்ளது என்றாலும், அதில் இருந்து வாடகை பணம் வருகிறது என்றாலும், விவசாய நிலம் உள்ளது என்றாலும், அதிலிருந்து வருமானம் வருகிறது என்றாலும், அதனால் தான் கடந்த 20 ஆண்டுகளாக நான் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு ஏதும் கேட்கவில்லை என்றாலும், தற்போது எதிர் மனுதாரரிடம் இருந்து பணத்தை பெற்று என் சகோதரர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று வழக்கு தொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

2. நான் வட்டி தொழில் செய்கிறேன் என்றாலும், அதில் இருந்து எனக்கு வருமானம் வருகிறது என்றாலும், அதனால் எனக்கு ஜீவனாம்சம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் வேலைக்கு சென்று மாதம் ரூ.35000/—க்கு மேல் சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் 25 ஆண்டுகளாக வீட்டில் தான் இருந்து வருகிறேன். எதிர் மனுதாரர் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார் என்பதை காட்ட ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக சொல்லி தான் பெண் கேட்டார்கள். எதிர் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க எவ்வித வருமானமும் இல்லை என்பதை தெரிந்தே நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.